பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
24 05 2026 SUNDAY 7 15 PM ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மேற்காசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுக்களில் பெரிய அளவில் முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. Marco Rubio கூறியுள்ளார்.

2. மீன்வளத்துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. மேற்குவங்கத்தின் Falta சட்டப்பேரவை தொகுதிக்கு நடைபெற்ற மறுதேர்தலில் பிஜேபி வேட்பாளர் திரு. Debangshu Panda வெற்றி பெற்றுள்ளார்.

4. தெலங்கானாவில் கோடை வெயில் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு, 16 பேர் உயிரிழந்தனர்.

5. உலக சேலஞ்ச் கோப்பை ஜிம்னாஸ்டிக் போட்டியில் இந்தியாவின் Pranati Nayak வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<

மேற்காசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுக்களில் பெரிய அளவில் முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. Marco Rubio கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருடன் நடத்திய பேச்சுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

Hormuz நீரிணையை முழுமையாக திறப்பதற்கான அம்சமும் இதில் அடங்கும் என்று அவர் கூறினார்.

இதற்கான அறிவிப்பினை அடுத்த சில மணிநேரத்தில் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் வெளியிடுவார் என்றும் திரு. Marco Rubio தெரிவித்தார்.

>>>>><<<<<

மீன்வளத்துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

வடகிழக்கு மாநிலங்களில் மீன்வளத்துறையின் சார்பில் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் குறித்த மண்டல ஆய்வுக்கூட்டம் நாளை மிஸோரமில் நடைபெறவுள்ளதாக மீன்வளத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்தக் கூட்டத்தில் மத்திய அமைச்சர் திரு. ராஜீவ்ரஞ்சன் சிங் பங்கேற்று, 32 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஞாயிறு தோறும் சைக்கிள் பயிற்சி இயக்கத்தில் மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று மத்திய விளையாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி. Raksha Khadse கூறியுள்ளார்.

குவஹாத்தியில் உள்ள ஐ.ஐ.டி. வளாகத்தில், இந்த சைக்கிள் பயிற்சி இயக்கத்தில் பங்கேற்று அவர் பேசினார்.

உடல்நலனை சீராக பராமரிக்க சைக்கிள் பயிற்சி உதவிடும் என்றும் திருமதி. Raksha Khadse தெரிவித்தார்.

>>>>><<<<<

மேற்குவங்கத்தின் Falta சட்டப்பேரவை தொகுதிக்கு நடைபெற்ற மறுதேர்தலில் பிஜேபி வேட்பாளர் திரு. Debangshu Panda வெற்றிபெற்றுள்ளார்.

இவர் தமக்கு அடுத்தபடியாக வந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் திரு. Sambhu Nath Kurmi-யை விட, ஒரு லட்சத்து 9 ஆயிரம் வாக்குகள் கூடுதலாக பெற்று வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

மேற்குவங்க சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவின் போது, முறைகேடுகள் நடைபெற்றதாக பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் இந்த தொகுதியில் மறுவாக்குப்பதிவிற்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டிருந்தது.

>>>>><<<<<

உத்தரபிரதேசத்தில் மின்சாரம் தடையின்றி விநியோகம் செய்யப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் அறிவுறுத்தியுள்ளார்.

குறிப்பாக, கிராமப்புற பகுதிகளில் மின்சாரம் தடையின்றி வழங்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளதாக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கோடை வெயில் அதிகரித்துள்ளதால், மின் தேவையும் உயர்ந்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

விவசாயிகளின் நலனுக்கு தில்லி அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் விவசாயக் குழுவினருடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

விவசாயிகளின் பிரச்சினைக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் திருமதி. ரேகா குப்தா தெரிவித்தார்.

>>>>><<<<<

பீகாரில் சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில துணை முதலமைச்சர் திரு. விஜய்குமார் சௌத்ரி கூறியுள்ளார்.

பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பசுமை நிதியம் ஏற்படுத்தப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

வனப்பரப்பை அதிகரிப்பதில் இந்த நிதியம் முக்கியப் பங்கு வகிக்கும் என்றும் அவர் கூறினார்.

இதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பான பிரச்சினைகள் குறையும் என்றும் திரு. விஜய்குமார் சௌத்ரி தெரிவித்தார்.

>>>>><<<<<

ஆந்திராவில் எபோலா வைரஸ் பரவலை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திரு. சத்யகுமார் யாதவ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து வரும் பயணிகளுக்கு விமான நிலையங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தார்.

எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு தேவையான அனைத்து முன்னேற்பாடுகளும் மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

>>>>><<<<<

தெலங்கானாவில் கோடை வெயிலின் தாக்கத்தினால் 16 பேர் உயிரிழந்துள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

*Jayashankar Bhupalpally* மாவட்டத்தில் மட்டும் 4 பேர் உயிரிழந்துள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வாரங்கல், கரீம்நகர், நிஜாமாபாத் ஆகிய மாவட்டங்களில் தலா 3 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*Jogulamba Gadwal, Rangareddy, Suryapet* ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

>>>>><<<<<

பெட்ரோல் மற்றும் டீசல் விநியோகம் தடையின்றி நடைபெற்று வருவதாக பாரத் பெட்ரோலிய கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. சுக்மல் குமார் ஜெயின் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், நாடுமுழுவதும் உள்ள பெட்ரோல் நிலையங்களில் விற்பனை தடையின்றி நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

இதுகுறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றும் அவர் கூறினார்.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை அதிகரித்துள்ளதன் காரணமாகத் தான் பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயர்த்தப்பட்டுள்ளதாக திரு. சுக்மல் குமார் ஜெயின் தெரிவித்தார்.

>>>>><<<<<

சத்திஷ்கடில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில், ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

Kanker மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் பாதுகாப்பு படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தபோது இவை பறிமுதல் செய்யப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

அப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

>>>>><<<<<

ராஜஸ்தானில் நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

Rajsamand மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில், லாரி இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>><<<<<

யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய தாக்குதலில் 2 பேர் உயிரிழந்தனர்.

Kyiv நகரை குறிவைத்து ரஷ்யா ஏவுகணை தாக்குதலை நடத்தியதாக யுக்ரைன் அதிபர் திரு. Volodymyr Zelenskyy கூறியுள்ளார்.

இதில் 70க்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த தாக்குதலை உறுதி செய்துள்ள ரஷ்யா, யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

உலக சேலஞ்ச் கோப்பை ஜிம்னாஸ்டிக் போட்டியில் இந்தியாவின் Pranati Nayak வெள்ளிப்பதக்கம் வென்றார்.

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் Vault பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>><<<<<

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 3 தங்கம், 3 வெள்ளி, நான்கு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

வியட்நாமில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 23 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் 68 கிலோ எடைப்பிரிவில் Mansi Lather-ம், 76 கிலோ எடைப்பிரிவில் காஜல்-ம், ஆடவர் 63 கிலோ எடைப்பிரிவில் Sumeet-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

மகளிர் 50 கிலோ எடைப்பிரிவில் Sweety-ம், 59 கிலோ எடைப்பிரிவில் Neha-வும், ஆடவர் 67 கிலோ எடைப்பிரிவில் Sagar Singh-ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் 130 கிலோ எடைப்பிரிவில் Hardeep-ம், 97 கிலோ எடைப்பிரிவில் ரோஹித்தும், 77 கிலோ எடைப்பிரிவில் சச்சினும் வெண்கலப்பதக்கங்களை கைப்பற்றினர்.

மகளிர் 55 கிலோ எடைப்பிரிவில் Ahilya Shatrughn Shinde வெண்கலப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 3 தங்கம், 5 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

>>>>><<<<<

ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 3 வெள்ளி, நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

சீனாவின் Sichuan-ல் நடைபெற்ற இப்போட்டியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் Aryaveer Dewan தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 13 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் Amarya Bajaj வெள்ளிப்பதக்கத்தையும், Abhyuday Arora வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில் Shiven Agarwal வெள்ளிப்பதக்கத்தையும், லோகேஷ் சுப்பிரமணி வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் பிரிவில் Anika Dubey வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் 13 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் Shanaya Parasrampuria-வும் Divyanshi Jain-வும் வெண்கலப்பதக்கத்தை கைப்பற்றினர்.

>>>>><<<<<

பாங்காக் சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Divyanshi Bhowmick பட்டம் வென்றார்.

*மகளிர் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 11-6, 11-6, 11-6 என்ற செட் கணக்கில், சீனாவின் Yao Ruixuan-ஐ வென்றார்.*

*>>>>><<<<<*

*மத்திய ஆசிய மகளிர் வாலிபால் சாம்பியன் போட்டியில், இந்தியா இன்று மாலத்தீவை வென்றது.*

*காட்மாண்டுவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் இன்றைய ஆட்டத்தில் இந்தியா 25-9, 25-14, 25-17 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றிபெற்றது.*

*>>>>><<<<<*

*Federation கோப்பைக்கான தடகள சாம்பியன் போட்டியில் தமிழகம் ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.*

*ராஞ்சியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 400 மீட்டர் ஓட்டப்பிரிவில் விஷால் தங்கப்பதக்கத்தையும், ராஜேஷ்குமார் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.*

*>>>>><<<<<*